கனம் திரு. பூ. கக்கன்: அநேகமாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. திட்டமே இந்த 'குளோஷர் பீரியடிற்குள்' முடிந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். அநேகமாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

Veterinary College

* 120 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to open an additional Veterinary College; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir; and

(*b*) Details of the proposal have not yet been settled.

Entertainment tax (surcharge)

* **121 Q.**—SRI V. KRISHNAMOORTHY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to withdraw the powers conferred on local bodies to levy surcharge on entertainments taxes; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No such proposal is just now under consideration of Government; and

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சர்சார்ஜ் விதிக்கின்ற உரிமை கொடுத்திருக்கிற காரணத்தினால், ஒரே சினிமாவுக்கு பல பகுதிகளிலே பல விதமாக டிக்கெட் விலைகள் அமைந்திருப்பதால், ஏழைகளும் மற்றவர்களும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். அதனால் அதை ஒருமுகப்படுத்தும் வகையில் பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடிகளுக்கு கொடுத்திருக்கும் அதிகாரத்தை ரத்து செய்துவிட்டு, இது விஷயமாக ஏதாவது ஒரு 'யுனிபாரம்' சட்டத்தை கொண்டுவர சர்க்கார் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அதிகாரம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டது. இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தினால். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை எடுத்துவிடும் விஷயத்தில் நாம் நினைத்தமாதிரி செய்வது முறையல்ல. ஆகையினால் அரசாங்கத்திற்கு அந்த உத்தேசம் இல்லை என்று சொன்னேன்.

Medical Colleges (admissions)

* **122 Q.**—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government propose to reserve any seats for Science Graduates in regard to admission to Medical Colleges.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No, Sir.